பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 686 **நாள்: 17.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 01.01.2026 முதல் 15.11.2026 வரை 210 மெட்ரிக் டன் சுகாதாரக் கழிவுகள் தனியாகச் சேகரிக்கப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரையுள்ள மண்டலங்களில் உருவாகும் சுகாதாரக் கழிவுகளை பாதுகாப்பாகவும் அறிவியல் முறையிலும் அகற்றுவதற்காக, கொடுங்கையூரில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட அங்கீகரிக்கப்பட்ட அறிவியல் முறையிலான எரியூட்டும் நிலையத்தின் மூலம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பயன்படுத்தப்பட்ட டயப்பர்கள், சானிட்டரி நாப்கின்கள் மற்றும் இதர சுகாதாரக் கழிவுகளை முறையாகச் சேகரித்து, கொடுங்கையூரில் உள்ள 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அறிவியல் முறையில் அகற்றிட மண்டல அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட களப்பணியாளர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், சுகாதாரக் கழிவுகளை முறையாகப் பிரித்து, தூய்மைப் பணியாளர்களிடம் தனியாக ஒப்படைத்திட பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் இதர பெருமளவு கழிவுகள் உருவாக்குபவர்களிடம் இருந்து 01.01.2026 முதல் 15.11.2026 வரை மொத்தம் 210 மெட்ரிக் டன் சுகாதாரக் கழிவுகள் தனியாகச் சேகரிக்கப்பட்டு, பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்காக கொடுங்கையூரில் உள்ள 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட அறிவியல் முறையிலான எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுகாதாரக் கழிவுகள் பிற திடக்கழிவுகளுடன் கலப்பது தடுக்கப்படுவதுடன், முறையற்ற கழிவு அகற்றலால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் பொது சுகாதார அபாயங்களும் குறைக்கப்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தூய்மையான, சுகாதாரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த சென்னையை உருவாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பான மற்றும் அறிவியல் முறையிலான திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிடவும், பயன்படுத்தப்பட்ட டயப்பர்கள், சானிட்டரி நாப்கின்கள் மற்றும் இதர சுகாதாரக் கழிவுகளை காகிதம் அல்லது உரிய உறைகளில் பாதுகாப்பாகச் சுற்றி, வழக்கமான கழிவுச் சேகரிப்பு முறையின்படி தூய்மைப் பணியாளர்களிடம் தனியாக ஒப்படைத்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.

Greater Chennai Corporation

Press Release

PR No. : 686 **Date: 17.11.2026**

Between January 1, 2026, and November 15, 2026, 210 metric tonnes of sanitary waste were collected separately from areas under the Greater Chennai Corporation and transported to the incineration facility in Kodungaiyur for processing.

To ensure the safe and scientific disposal of sanitary waste generated across Zones 1 to 15 of the Greater Chennai Corporation, the Corporation has implemented measures utilizing an authorized, scientific incineration facility in Kodungaiyur, which has a daily processing capacity of 50 metric tonnes.

The Corporation Commissioner has instructed zonal officials and field staff to ensure the systematic collection of used diapers, sanitary napkins, and other sanitary waste, and their subsequent transport to the 50-metric-tonne capacity incineration facility in Kodungaiyur for scientific disposal. Furthermore, he has directed that awareness be raised among the public regarding the proper segregation of sanitary waste and its separate handover to sanitation workers.

As part of this initiative, a total of 210 metric tonnes of sanitary waste—collected from households and other bulk waste generators within the Corporation's jurisdiction between January 1, 2026, and November 15, 2026—was transported to the 50-metric-tonne capacity scientific incineration facility in Kodungaiyur for safe disposal and processing. This measure prevents sanitary waste from mixing with other solid waste, thereby reducing environmental damage and public health risks caused by improper waste disposal.

Therefore, the public is requested to extend their full cooperation to the Greater Chennai Corporation's safe and scientific solid waste management initiatives, which aim to create a clean, hygienic, and eco-friendly Chennai. Residents are advised to securely wrap used diapers, sanitary napkins, and other sanitary waste in paper or appropriate packaging, and hand them over separately to the sanitation workers during the regular waste collection process.

Issued By: Joint Director / Public Relations Officer,

Greater Chennai Corporation